பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 22 திங்கட்கிழமை 10.10.2022 கதிர் 226

## அதிவேக வீதி விபத்தில் பெண்ணொருவர் சாவு!

### அறுவர் வைத்தியசாலையில்

அத்துருகிரிய வெளிசுற்றுவட்ட அதிவேக வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துடன் மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

காலியிலிருந்து அத்துருகிரிய நோக்கியப் பயணித்த வான் ஒன்று, அதே திசையை ☞2

### வெலிக்கடை சிறைச்சாலையில்

## திலினி அடைத்துவைக்கப்பட்டுள்ள அறையிலிருந்து தொலைபேசி மீட்பு



பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டதால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலியின் சிறைச்சாலை அறையில் இருந்து கையடக்கத் தொலைபேசி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ☞2

## தேர்தலை மேலும் ஒத்திவைத்தால் நீதிமன்றத்தை நாடியே தீருவோம்!

### அரசுக்குப் பீரிஸ் பகிரங்க எச்சரிக்கை



உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மேலும் ஒத்திவைப்பதற்கு அரசு தீர்மானித்தால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் சபையால் கொழும்பில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் வைத்தே ☞8

# ஒன்றுசேர்ந்து மீண்டும் திருட சிலர் அழுதுகொண்டே அழைப்பு

### மக்கள் முன்னிலையில் ராஜபக்ஷ அணியைச் சாடினார் சஜித்





**நாட்டைத் தனித்தனியாகக் கொள்ளையடித்த குழுக்கள் தற்போது ஒன்று சேர்ந்து நாட்டைக் கொள்ளையடிக்க ஒருவரையொருவர் அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.** ☞8

## இலங்கை இனிமேல் ஏழ்மையான நாடாம்

### பிரகடனப்படுத்த அரசு தயார்

இலங்கையைக் குறைந்த வருமானம் பெறும் நாடாக அடையாளப்படுத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது என அறியமுடிகின்றது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம், இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. ☞2

## 'மொட்டு'வின் 6 பேர் டலஸின் சங்கமம்?

டலஸ் அழகப்பெரும தலைமையில் இயங்கும் சுயாதீன எம். பிக்கள் குழுவில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மேலும் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணையவுள்ளனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜீ. எல். பீரிஸின் இல்லத்துக்குக் கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று சென்றிருந்தது. ☞2

## சிசு மரணம் பற்றி தீவிர விசாரணை

(வவுனியா நிருபர்)

வவுனியா வைத்தியசாலையில் பிறந்து இறந்த சிசு தொடர்பில் திடீர் முற்றுகைப் பிரிவினர் மூன்று தினங்கள் தங்கி நின்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி வவுனியா மாவட்ட பொது வைத்தி ☞2

## பருத்தித்துறையில் சுறா மழை



யாழ்., வடமராட்சி, பருத்தித் துறையில் மீனவர் ஒருவரின் வலையில் அதிக எடை கொண்ட 14 சுறா மீன்கள் பிடிபட்டுள்ளன.

இவ்வாறு பிடிக்கப்பட்ட சுறா மீன்கள் மொத்தமாக 2 ஆயிரம் கிலோகிராம் எடை கொண்டுள்ளன. ☞2

## மஹிந்தவுக்கு பிறந்தநாள் பரிசாக பிரதமர் பதவியா?



மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தச் செய்திகளில், எதிர் வரும் நவம்பர் 18ஆம் ☞2

## செயற்றிறனற்றவர் மாவை: பதவி துறந்தார் பரஞ்சோதி



இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் செயற்றிறனாக - வினைத்திறனாக முன்நகர்த்துவதற்குக் கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா தவறிவிட்டார். இதனால் கட்சியின் சகல பொறுப்புக்கள் - பதவிகளிலிருந்தும் விலகுகின்றேன்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உப தலைவர் பதவி வகித்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை கட்சித் தலைவர் மற்றும் பொதுச்செயலாளருக்கு ☞2



## செயற்றிறனற்றவர்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பிவைத்த பின்னர் ஊடகங்களுக்கு வெளியிட்ட தகவலிலேயே மேற்படி விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் பங்காளிக் கட்சிகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரை மாற்றுமாறு விடுத்த கோரிக்கையை செயற்படுத்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற ரீதியில் மாவை சோ. சேனாதிராஜா தவறிவிட்டார்.

இதன் அடிப்படையிலும் கட்சியை வினைத்திறனாகக் கொண்டு செல்ல முடியாத ஒரு இயலாமையான நிலையில் தலைவர் காணப்படுகின்றார் என்பதன் அடிப்படையிலும் கட்சியிலிருந்து நான் விலகுகின்றேன் - என்று பரஞ்சோதி மேலும் தெரிவித்துள்ளார்.

## மகிந்தவுக்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளாகும். அன்றைய தினம் அவருக்குச் சிறப்பு பரிசாக பிரதமர் பதவியை வழங்குவதற்குப் பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக அவர்கள் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டி வருகின்றனர்.

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமிக்கக் கோரும் கடிதத்தில் அந்தக் கட்சி உறுப்பினர்கள் கையொப்பங்களை இடுகின்றனர்.

பெரும்பான்மை (113) உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்ததும் மஹிந்த ராஜபக்சவைப் பிரதமராக நியமிக்குமாறு ஜனாதிபதியை அவர்கள் கோருவர் என்று தெரியவருகின்றது.

பொதுஜன பெரமுன கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் இந்த முயற்சிக்கு தமது சம்மதத்தை அளித்துள்ளனர் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பருத்தித்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றின் தற்போதைய பெறுமதி சுமார் 19 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சுறா மீன்கள் கூலர் வாகனம் மூலம் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப் படவுள்ளன.

## சிசு மரணம்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யசாலையில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவர் அங்கு பிரசவித்த குழந்தை பிறந்து சில மணி நேரங்களின் பின் மரணமடைந்திருந்தது.

இந்த மரணத்துக்கு வைத்தியசாலையின் தவறே காரணம் எனத் தெரிவித்து பாதிக்கப்பட்ட தாயார் முறைப்பாடுகளைச் செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடுகளுக்கு அமைவாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு வருகை தந்த சுகாதார அமைச்சின் கீழான திடீர் முற்றுகைப் பிரிவினர் மூன்று தினங்கள் தங்கியிருந்து விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அது தொடர்பான பதிவுகள், ஆவணங்களையும் சோதனை செய்திருந்தனர்.

இதன்போது பாதிக்கப்பட்ட தாயை வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்து சுமார் 6 மணிநேரம் வாக்கு மூலமும் பெற்றிருந்தனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையில் கொழும்பிலிருந்து வந்த திடீர் முற்றுகைப் பிரிவினர் வைத்தியசாலையிலுள்ள தாதியர்கள், வைத்தியர்கள், பாதெமக்கள், பணியாளர்கள், தாதிய பரிபாலகரின் கையொப்பங்கள் அடங்கிய முக்கிய ஆவணங்கள், சிசு மரணமடைந்த போது கடமையில் இருந்தோர் விபரங்கள் என்பவற்றைப் பரிசோதித்துள்ளனர்.

இதேவேளை, தனது குழந்தையின் மரணத்துக்கு இவர்களது விசாரணை முடிவில் தீர்வு கிடைக்கும் எனத் தான் நம்புகின்றார் என்று பாதிக்கப்பட்ட தாயார் தெரிவித்துள்ளார்.

## இலங்கை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலக வங்கியின் கிளையான சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் உதவிகளை பெறும் நோக்கிலும், அந்நியச்செலாவணி இருப்பில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, பணவீக்கம், கடனை மீள செலுத்துவதில் உள்ள நெருக்கடி உள்ளிட்ட காரணிகளாலுமே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அமைச்சரவைப் பத்திரத்தில் முழுமையான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது எனவும், அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் அது தொடர்பில் உலக வங்கிக்கு தெரியப்படுத்தப்படும் எனவும் அறியமுடிகின்றது.

இலங்கையானது இதுவரையில் மத்திய வருமானம் பெறும் நாடாகவே அடையாளப்படுத்தப்பட்டு வந்தது.

## மொட்டுவின்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுர பிரியதர்சன யாப்பா, பிரியங்கர ஜயரத்ன, சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, ஜயரத்ன ஹேரத், சந்திம வீரக்கொடி, ஜோன் செனவிரட்ன ஆகியோர் இந்தக் குழுவில் இருந்தனர்.

இவர்களுடன், டலஸ் அழகப்பெரும, சரித் ஹேரத், நாலக கொடஹேவா, டிலான் பெரேரா ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சந்திப்பின் நிறைவில், இரு தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாட்டுடன் செயற்பட உடன்பட்டனர் என்று தெரியவந்துள்ளது.

## அதிவேக.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த ஜீப் வாகனமொன்றுடன் மோதுண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் ஜீப் வாகனத்தில் பயணித்த சாரதி உள்ளிட்ட இருவர் மற்றும் வானில் பயணித்த ஐந்து பெண்கள் காயமடைந்து, ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், காயமடைந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மாலபே பகுதியைச் சேர்ந்த 57 வயதான பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் அத்துருகிரிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெலிக்கடை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, சிறைச்சாலைப் பாதுகாப்பு பிரிவால் கைத்தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டது என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

பாரியளவு நிதி மோசடியில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் திலினி பிரியமாலியை எதிர்வரும் ஒக்டோபர் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேர்தல் ஆப்பு ஆணையம்

**மக்களின் அடிப்படை உரிமைகளில் பிரதானமான ஒன்று ஜனநாயக உரிமை. வாக்களிக்கும் உரித்து.**

**ஜனநாயகத்தைச் சீரிய முறையில் பாதுகாத்துப் பேணி, அதை நிலை நிறுத்துவதில் முக்கிய பங்கு தேர்தல் ஆணையத்துக்கு உண்டு.**

**ஆனால் தேர்தல் ஆணையத்தின் அந்தப் பிரதான கடப்பாட்டை மறந்து மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு சாவு மணி அடிக்கும் கொடுஞ்செயலுக்குத் துணை போகின்றது இலங்கையின் தேர்தல் ஆணையம்.**

**அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் கீழ் சுயாதீனமும் சுதந்திரமும் பெற்றிருந்த தேர்தல் ஆணையம், கோட்டாபய ராஜபக்ஷ கொண்டுவந்த அரசமைப்பின் இருபதாவது திருத்தத்தின் மூலம் தனது சுயத்தையும் தனித்துவத்தையும் சுயாதீனத்தையும் இழந்து, அதிகார வர்க்கத்தின் கைப் பொம்மையாக மாறிவிட்டது என்பதற்கு இப்போதைய நிலைமை நல்லதோர் எடுத்துக்காட்டு.**

**என்றோ புதிதாக வாக்காளர் பட்டியலில் சேரப் போகின்ற இளம் வாக்காளர்களுக்கு இடம் அளிப்பதற்காக என்ற பெயரில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பை இழுத்தடிக்க இந்தத் தேர்தல் ஆணையம் தயாரான போதே, உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் நிரந்தரமாகத் தள்ளிப்போடும் அரசு தலைமையின் சதித்திட்டத்திற்கு உதவும் மறைமுக நகர்வு இது என்பதை பகிரங்கமாக – வெளிப்படையாக – இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.**

**கடந்த இருபதாம் திகதியிலிருந்து உள்ளூராட்சித் தேர்தலைப் பிரகடனப்படுத்தி, அடுத்த தேர்தலுக்கான திகதியை அறிவித்து, தேர்தல் பணிகளை ஆரம்பிக்கும் அதிகாரம் சட்டரீதியாக தேர்தல் ஆணையத்துக்கு வந்துவிட்டது . அதனைச் சுட்டிக்காட்டி, இனியும் காலம் தாமதிக்காமல், உடனடியாகத் தேர்தலுக்குத் தேர்தல் ஆணையம் அறிவிப்பு விடுக்க வேண்டும் என வலியுறுத்தி இருந்தோம்.**

**அப்படி அறிவிக்காமல் காலத்தை இழுத்தடிப்பது, இந்தத் தேர்தலை நடத்தாமல் நிரந்தரமாக தள்ளிப்போடும் அரசு தலைமையின் சதித்திட்டத்திற்கு உடந்தையாகும் வேலை என்றும், ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக் காட்டி இருந்தோம்.**

**உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியின் முடிவு – தீர்மானம் – திட்டம் – யாது என்பது தெளிவாகிவிட்டது.**

**தேர்தல் முறைமைகளை மாற்றி அமைக்கும் சட்டங்களைக் கொண்டு வரப் போகின்றோம், அதன்பின்னர்தான் உள்ளூராட்சி தேர்தல்கள் என்பதைக் கோடி காட்டிவிட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

**அதாவது என்றோ வரப்போகின்ற தேர்தல் சட்டங்களைக் காரணம் காட்டி, இந்த உள்ளூராட்சி தேர்தலை நடத்தாமல் தவிர்ப்பதுதான் அரசு தலைமையின் எண்ணம்.**

**இப்படித்தான் 2017 மாகாண சபை தேர்தலுக்கு ஆப்படித்தது இதே ரணிலின் நல்லாட்சி அரசு. அதே சதிப் போக்கையே இப்போது உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டியும் நகர்த்துகின்றது அதே ரணிலின் தலைமை.**

**என்றோ புதிதாய்ப் பதியப்போகும் புது இளம் வாக்காளர்களுக்கு இடம் அளிக்கக் காத்திருக்கின்றோம் என்று கதை விட்டு –**

**கால எல்லை குறிப்பிடாமல் எப்போதோ வரப் போகின்ற உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பானதிய சட்டத்திற்கு வாய்ப்பளிப்பதற்காக பார்த்திருக்கின்றோம் என்று சளாப்பி –**

**மக்களின் வாக்களிக்கும் உரிமைக்கு ஆப்படிக்கத் துணைபோகின்றது இலங்கை தேர்தல் ஆணையம். அது புரியும் மிகப்பெரிய ஜனநாயக விரோதச் செயற்பாடு இதுவாகத்தான் இருக்கும்.**

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு லயன்ஸ் கழகத்தால் பாரிய செயற்றிட்டம்!



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி 1 இனால் ஒரு கோடியே 90 லட்சம் ரூபாவுக்கு மிகப் பெரிய வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

2021ஃ2022 ஆம் ஆண்டுக்கான மாவட்ட ஆளுநர் லயன் ஆர்.எல்.ராஜ்குமாரிடம் தனது பிரதேசமாகிய வலிகாமத்தின் சுகாதாரத் துறைக்கு பாரிய சேவைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் அவரது ஆழ்மனதில் ஆழ வேரூன்றியிருந்தது.

சுன்னாகம் சூறாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட லயன் ஆர்.எல்.ராஜ்குமார், ஆளுநராகத் தெரிவாகிய உடனேயே அவர் இது தொடர்பான வேலைத்திட்டத்தை முழுமூச்சுடன் ஆரம்பித்தார். அவரது காலத்தில் முதற்பெண் லயன் மரியனின் முயற்சியால் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு ரசீதுகள் அச்சிடப்பட்டு பெருந்தொகையான பணம் திரட்டப்பட்டது. ஆளுநரின் முயற்சியால் முன்னாள் ஆளுநர் கள் லயன்ஸ் கழக ஆளுநர்சபை பிரமுகர்கள் மற்றும் லயன்ஸ்கள், லயன்ஸ் கழகங்கள் எள ஒருகோடியே 90 லட்சம் ரூபா திரட்டப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த கிளிநொச்சியில் வதியும் பிரபல தொழிலதிபர் முத்துக்குமார், ஒட்சிசன் பிளான்ட் அமைப்பதற்கான கட்டடத்தைத் தனது முழுமையான செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார். புற்றுநோய் சிகிச்சையாளர்களுக்கு ஒவ்வொரு கட்டில்களுக்கும் ஒட்சிசன் சுவாசத்தை வழங்கும் வகையில் இந்த சேவைத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. இந்த வேலைத்திட்டம் முழுமையாக நிறைவுபெற்று மீதியாக உள்ள நிதிக்கு முக்கிய தேவையுடைய மருத்துவ உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட உள்ளன.

இது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பதில் வைத்திய அத்தியட்சகரும் பொது வைத்திய நிபுணருமாகிய வைத்திய கலாநிதி பா.நிரகன், புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கிருாந்தி, சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி வாகீசன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளர் லயன் சி.ஹறிகரன் ஆகியோருடன் கடந்தாண்டு லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் ராஜ்குமார் அவரது பாரியார் லயன் மரி யன் ராஜ்குமார், முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் வைத்தியர் வை.திஜாகராஜா, லயன் றொகான் குணதிலக, லயன் தேசபந்து சேனாதிஸ்ஸ சந்திரசேகர, லயன் ஶ்ரீபன் லெனாட் ஆகியோர் கலந்து சேவைத்திட்டங்கள் தொடர்பில் கலந்தாலோசித்து உடனடியாக வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு டிசெம்பருக்குள் பூர்த்திசெய்யப்படும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் தேயிலை என்றுமில்லாதவாறு அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டது!

*இலங்கையின் தேயிலை இதுவரை இல்லாத வகையில் கடந்த மாதம் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*இலங்கையின் தேயிலை 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 557.38 ஆக இருந்த நிலையில், தற்போது சராசரியாக 1,599.49 ஆக விற்கப்பட்டதாக சிலோன் டீ நிறுவனம் கூறியுள்ளது.*

*இதுவே கடந்த ஓகஸ்ட் மாதம் ஒரு கிலோகிராம் 1,508.21 ஆக விற்பனை செய்யப்பட்ட நிலையில் செப்ரெம்பர் மாதம் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.*

*2021 ஆம் ஆண்டு 621.1 ஆக இருந்த குறைந்த ரக தேயிலை செப்ரெம்பர் மாதத்தில் ஒரு கிலோகிராம் 1,706 இற்கும் நடுத்தர ரக தேயிலை, 1,336.9 இற்;கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.*

*குறைந்த விலையுள்ள உயர் ரகங்கள் கடந்த ஆண்டு செபரெம்பரில் ஒரு கிலோகிராமுக்கு 557.3 ஆக இருந்த நிலையில் சராசரியாக ஒரு கிலோவுக்கு 1,448.1 ஆக விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி மற்றும் செப் ரெம்பர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மூன்று ரக தேயிலையும் கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.*

## அனைத்து அமைப்பாளர்களையும் கொழும்புக்கு அழைக்கிறது சு.க.!

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து அமைப்பாளர்களும் இன்று விசேட கூட்டமொன்றுக்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகமான டார்லி வீதியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகியுள்ளது.

அதன்படி அனைத்து ஆசன மற்றும் மாவட்ட அமைப்பாளர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். கட்சியின் பல நாடாளுமன்ற உறுப்பி னர்கள், கட்சி தலைமையின் உத்தரவை மீறி அரசாங்கத்தில் அமைச்சு பதவிகளை ஏற்றுள்ளனர்.

இந்நிலையில் சுதந்திரக் கட்சி இரண்டு குழுக்களாக பிளவுபட்டுள்ளதுடன், அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன, நிகழ்ச்சி நிரலில் இருந்து தனியாக செயற்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

திங்கட்கிழமை 10.10.2022

# ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்து; நைஜீரியாவில் 76 பேர் உயிரிழப்பு



## அந்நாட்டு அதிபர் இரங்கல் தெரிவிப்பு

அபுஜா, ஒக்.10

நைஜீரியா நாட்டில் அனம்பிரா மாகாணத்தில் ஆக்பாரு பகுதியில் 85 பேரை ஏற்றி கொண்டு படகு திடீரென ஏற்பட்ட வெள்ளத்தில் படகு சிக்கி கொண்டமையால் பலர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

படகில் இருந்தவர்களில் நீச்சல் தெரியாத பலரும் நீரில் மூழ்கியுள்ளனர். அவர்களில் 76 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இதுபற்றித் தகவல் அறிந்ததும் மீட்பு மற்றும் நிவாரண பணி குழுக்களை சேர்ந்தவர்கள் சம்பவ பகுதிக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தத் துயர சம்பவத்திற்கு நைஜீரிய அதிபர் முகமது புகாரி டுவிட்டரில் இரங்கல் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அவர் ஆறுதலும் தெரிவித்துள்ளார். இந்தப் படகு விபத்து போன்று வருங்காலங்களில் வேறு சம்பவங்கள் எதுவும் நடக்காமல் இருப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் படியும், ஆய்வு செய்யும்படியும் அவற்றுடன் தொடர்புடைய துறை அதிகாரிகளுக்கும் அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

## ஈராக்கில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரம் இதுவரை 19 குழந்தைகள் உட்பட 185 பேர் மரணம்



தெஹ்ரான்,ஒக்.10

ஈராக்கில் பரவ. வரும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் இதுவரை 19 குழந்தைகள் உட்பட 185பேர் பலியாகியுள்ளனர்.

இஸ்லாமிய மத சட்டங்களை கடுமையாக பின்பற்றி வரும் ஈரானில் பெண்கள் மற்றும் 9 வயதிற்கு மேற்பட்ட சிறுமிகள் இஸ்லாமிய மத உடையான ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் தலைநகர் தெஹ்ரானில் ஹிஜாப் சரியாக அணியவில்லை என கூறி பொலிஸார் நடத்திய தாக்குதலில் கோமா நிலைக்கு சென்ற 22 வயதான மாா அமினி என்ற இளம்பெண் கடந்த மாதம் 17 ஆம் திகதி உயிரிழந்தார். ஹிஜாப் சரியாக அணியவில்லை என கூறி பொலிஸார் தாக்கியதில் இளம்பெண் மாா உயிரிழந்த சம்பவத்தை கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் குதித்தனர்.

ஹிஜாப்பை கழற்றி வீசியும், ஹிஜாப்பை தீ வைத்து எரித்தும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டம் நாட்டின் பல நகரங்களுக்குபரவி வருகிறது. ஹிஜாப் எதிர்ப்பு போராட்டக்காரர்களை ஒடுக்க ஈரான் அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஈரானில் சமூகவலைதளங்கள் முடக்கப்பட்டுள்ளன. மக்கள் கூட்டமாக கூடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், நாட்டின் பல்வேறு மாகாணங்களில் ஈரான் அரசுக்கு எதிராகவும், ஹிஜாப் ஆடை கட்டுப்பாட்டிற்கு எதிராகவும் போராட்டம் தொடர்ந்து வருகிறது.

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளும் போராட்டத்தில் குதித்துள்ளனர். போராட்டம் தீவிரமடைந்து வரும் நிலையில் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு படையினர் கடுமையான தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியும், தடியடி, கண்ணீர் புகைக் குண்டு வீசியும், கைது நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். பாதுகாப்பு படையினர் தாக்கியதில் போராட்டக்காரர்கள் பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், ஹிஜாப் எதிர்ப்பு போராட்டக்காரகள் மீது ஈரான் பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதலில் இதுவரை 185 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 19 பேர் குழந்தைகள் என ஈரான் மனித உரிமைகள் அமைப்புதெரிவித்துள்ளது. போராட்டம்தொடர்ந்துதீவிரமடைந்துவருவதால்பலிஎண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெனிசுலாவில் கனமழையால் நிலச்சரிவு: 22 பேர் உயிரிழப்பு

## அவசரகால நிலை, துக்கதினம் அறிவிப்பு





சான்டோஸ் மிச்செலினா, ஒக்.10

வெனிசுலா நாட்டில் கடந்த சில நாள்களாகக் கனமழை பெய்து வருகிறது. இதனால், சான்டோஸ் மிச்செலினா நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் லாஸ் தெஜேரியாஸ் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அவற்றின் 5 கால்வாய்களிலும் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த நிலையில், அரகுவா என்ற மத்திய மாகாணத்தின் வடக்கே கனமழையால் நேற்றையதினம் நிலச்சரிவு ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலச்சரிவில் பலர் சிக்கி கொண்ட நிலையில், அவர்களில் 22 பேர் பலியாகியுள்ள மையுடன், 50 பேர் வரைக் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, அந்நாட்டு அதிபர் நிகோலஸ் மதுரோ, அவசரகால நிலையை பிறப்பித்து உள்துறை அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு முகமைகளை சம்பவ பகுதிக்கு சென்று மீட்பு பணி உள்ளிட்டவற்றை மேற்கொள்ளும்படி உத்தரவிட்டு உள்ளார். இதன்படி, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள், மீட்பு பணிகளுக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

வெனிசுலாவில் பேரிடரில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆதரவாகத் துணை நிற்கும் வகையில் நாட்டில் 3 நாள்கள் தேசிய அளவில் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்றும் அதிபர் மதுரோ அறிவித்து உள்ளார்.

# ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதலில் 17 பேர் பலி: உக்ரைனில் பேரவலம்!

உக்ரைனின் தென்கிழக்கு பகுதியில் உள்ள ஜாபோரிஜியாநகரில்நேற்று முன்தினம்நள்ளிரவு ரஷ்யப் படைகள் ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தின. குடியிருப்புக் கட்டடங்களைக் குறிவைத்து ஏவுகணைகள் வீசப்பட்டன. இதில் வானவளாவிய அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடத்தின் ஒரு பகுதி முற்றிலுமாக இடிந்து தரை மட்டமானது. இது தவிர ஐம்பதுக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன. ரஷ்ய படைகளின் ஏவுகணை வீச்சில் பெண்கள், சிறுவர்கள் உள்பட 17 பேர் பலியாகியமையுடன், நாற்பதுக்கும் அதிகமானோர் பலத்த காயம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த சில மாதங்களாக போர் தொடுத்து வருகின்ற நிலையில், இந்த போரில் உக்ரைனின் பல்வேறு நகரங்கள் சின்னாபின்னமாகி உள்ளன. இந்தச் சூழலில் உக்ரைனிடம் இருந்து கடந்த 2014 ஆம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட கிரீமியாவையும், ரஷ்யாவையும் இணைக்கும் முக்கிய பாலத்தில் பயங்கர குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதில் அந்த பாலம் பலத்த சேதம் அடைந்ததுடன் 3 பேர் உயிரிழந்தனர். இந்த குண்டு வெடிப்பை தொடர்ந்து உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா தீவிரப் படுத்தியுள்ளது.



# ஆண்கள் மட்டும் வழிபடும் வினோத விழா; ஆடுகள் பலியிட்டு பெண் தெய்வ வழிபாடு

கமுதி,ஒக்.10

தமிழ்நாடு கமுதி அருகே முதல்நாடு கிராமத்தில் உள்ள எல்லைபிடாரி அம்மன் பீடத்திற்கு ஆடுகள் பலியிட்டு ஆண்கள் மட்டும் வினோத வழிபாடு செய்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே முதல்நாடு கிராமத்தில் உள்ள கண்மாய் கரையில் எல்லைப்பிடாரி அம்மன் பீடம் உள்ளது. இங்கு 3 தலைமுறைகளாக புரட்டாசி மாதம் மூன்றாவது வாரத்தில் ஆண்டுதோறும் ஆண்கள் மட்டும் வழிபடும் வினோத விழா நடக்கிறது.

இங்கு 5 ஆண்களோடு பிறந்த பெண் ஒருவர் துன்புறுத்தப்பட்டு வீட்டிலிருந்து வெளியே வந்து மாயமானார். பின்னர் முதல்நாடு கிராம மக்களின் கனவில் வந்து தங்கள் ஊர் எல்லையில் இருந்து தெய்வமாக காப்பாற்றுவேன் எனவும் தன்னை ஆண்கள் மட்டும் ஆண்டுக்கு ஒரு நாள் ஆடுகள் பலியிட்டு வழிபாடு செய்ய வேண்டும், அப்பகுதிக்கு பெண்கள் வரக்கூடாது என்றும் கூறினார் என நம்பப்படுகிறது.

இந்தஆண்டு புரட்டாசி மாதம் மூன்றாம் வாரத்தில் ஆண்கள் மட்டும் வழிபடும் வினோத வழிபாடு பீடம் அமைக்கப்பட்டது. நேற்று முன்தினம் இரவு எல்லைப்பிடாரி



அம்மன் பீடத்திற்கு கைகுத்தல் பச்சரிசி சாதம் உருண்டை செய்து 51 ஆடுகள் பலியிட்டு படையல் இடப்பட்டது. பின்னர் அம்மனுக்கு சிறப்புபூஜை நடந்தது. படையல் இட்ட உணவு பனைஓலையால் செய்த மட்டையில் பரிமாறப்பட்டது.

இங்குள்ள எந்த பொருளையும் பெண்கள் பார்க்க கூடாது என்பதால் மீதமிருந்த சாப்பாடு, விபூதி, பூஜைபொருட்கள் அனைத்தும் குழித்தோண்டி புதைக்கப்பட்டன. இத்திருவிழாவில் கமுதி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் இருந்து 3,000க்கும் மேற்பட்ட ஆண்கள் பங்கேற்று எல்லை பிடாரி அம்மனை வழிபட்டனர்.

## 'ஒப்பரேஷன் மின்னல் ரவுடி வேட்டை' தமிழகத்தில் 1,310 ரவுடிகள் கைது!



சென்னை,ஒக்.10

தமிழகத்தில் ரவுடிகள் மீதானநடவடிக்கையைதீவிரப் படுத்த வேண்டும் என, இரு தினங்களுக்கு முன், பொலிஸ்ஸ் உயர் அதிகாரிகளுக்கு, டி.ஜி.பி. சைலேந்திரபாபு உத்தரவிட் டார். இதற்கு, 'ஒப்ப ரேஷன் மின்னல் ரவுடி வேட்டை' என்றும் பெயரிட் டுள்ளார்.

அதன்படி, மாநிலம் முழுவதும் பொலிஸார் 48 மணி நேரத்தில், 1,310 ரவுடிகளைக் கைது செய்து உள்ளனர். இவர்களில், தலைமறைவாக இருந்த வர்கள் 221 பேர், நீதி ம ன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள்110 பேர். இவர்களை பொலி ஸார் வெவ்வேறு சிறைகளில் அடைத்துள்ள னர். மீதமுள்ள 979 ரவுடிக ளிடம், நன்னடத்தை உறுதி மொழி பத்திரம் பெறப்பட்டுள் ளது. இவர்கள் உறுதிமொழியை மீறினால், உடனடியாகக் கைது செய்யப்பட்டு, ஆறு மாதம் சிறையில் அடைக்கப் படுவர் எனப் பொலிஸார் கூறினர்.

## 32 அநாதைப் பிணங்களை ஒரே இடத்தில் அடக்கம் செய்த பொலிஸ இன்ஸ்பெக்டர்




32 அனாதைப் பிணங்களை ஒரே இடத்தில் அடக்கம் செய்த தமிழகப் பொலிஸ்காரர்கள் பற்றி செய்தி வெளியாகியுள்ளது.

தஞ்சை மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரி பிணவறையில் அடையாளம் தெரியாத சடலங்கள், பெயர் தெரிந்த சடலங்கள் என 32 பிணங்கள் கடந்த சில மாதங்களாக உள்ளன. இதில் 6 பெண்கள் உடல்களும், 2 குழந்தைகள் உடல்களும், 24 ஆண்கள் உடல்களும் அடங்கும்.


இந்த உடல்களுக்கு யாரும் உரிமை கோராவிட்டால் ஒரு வாரத்தில் அவை அடக்கம் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் யாரும் உரிமம் கோரவில்லை. இதை யடுத்து 32 உடல்களையும் அடக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து தஞ்சை மருத்துவக்கல்லூரி பொலிஸ் நிலைய சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் மனோகரன், தலைமை பொலிஸ் கான்ஸ்டபிள் ரகுநாதன் ஆகியோர் சேர்ந்து அனாதையாக இருந்த 32 உடல்களையும் அம்புலன்ஸில் ஏற்றி சாந்திவனம் சுடுகாட்டிற்கு கொண்டு சென்றனர். அங்கு பொக்லின் எந்திரம் மூலம் ராட்சத குழி தோண்டப்பட்டு அதில் 32 உடல்களும் அடுக்கப் பட்டு அடக்கம் செய்யப்பட்டன.

அங்கு இறந்தவர்களுக்கு, என்னென்ன சடங்கு, சம்பிரதாயங்கள் செய்யப்படுமோ அவை செய்யப்பட்டு அந்த உடல்கள் அடக்கம் செய்யப் பட்டன.

இது குறித்து மருத்துவக்கல்லூரி பொலிஸ் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் மனோகரன் கூறு கையில் - "நான் மருத்துவக்கல்லூரி பொலிஸ் நிலையத்துக்கு வந்து 3 ஆண்டுகள் ஆகி விட்டன. இந்த 3 ஆண்டுகளில் 150க்கும் மே ற்பட்ட அனாதை உடல்களை நானும், தலைமை பொலிஸ் கான்ஸ்டபிள் ரகுநாதனும் எங்களது செலவில் அடக்கம் செய்துள்ளோம். தற்போது எங்களுடன் மன்னார்குடியை சேர்ந்த ஒரு தொண்டு நிறுவனமும் இணைந்து அடக்கம் செய்வதற்கு உதவி செய்துள்ளது. தற்போது ரகு நாதனும் வேறு பொலிஸ் நிலையத்திற்கு மாறு துதல் ஆகி சென்று விட்டார். இறந்தவர்களுக்கு யாரும் இல்லாததால் நாங்கள் இதனை ஒரு சேவையாக கருதி செய்து வருகிறோம்என்றார்.

## முலாயம் சிங் யாதவ் இன்று காலமானார்



குருகிராம்,ஒக்.19

உத்தர பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் முலாயம் சிங் யாதவ் உடல்நல குறைவால் சிகிச்சை பலனின்றி இன்று காலமானார்.

சமாஜ்வாதிக்கட்சியின் தலைவரான முலாயம் சிங் யாதவுக்கு கடந்த சில நாக்களுக்கு முன்பு தி டீரென உடல்நல குறைவு ஏற்பட்டது. சுவாசிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. ஆக்சிஜன் அளவும் அவருக்கு குறைந்தது. இதனை தொடர்ந்து, அவர் அரியானாவின் குருகிராம் நகரில் உள்ள மேதந்தா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டார்.

இந்நிலையில், அவரது உடல்நிலை தொடர்ந்து மோசமடைந்த சூழலில், ஐ.சி.யூ.வில் அவரை சேர்த்து மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். தொடர்ந்து வென்டிலேட்டர் உதவியுடன் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதன்பின்னர், அவரது மகன் மற்றும் உத்தர பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் மற்றும் அவரது மனைவி டிம்பிள் யாதவ் ஆகியோர் டெல்லிக்கு விமானத்தில் சென்று பின்னர், மாலையில் மருத்துவம னைக்கு சென்றனர். முலாயம் சிங்கின் சகோதரர், அவரது மகன் உள்பட குடும்பத்தினர் பலர் உடனிருந்தனர்.

இந்நிலையில், தீவிர சிகிச்சை பிரிவில் (ஐ.சி.யூ.) வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், அவரை மருத்துவர்கள் அவசர சிகிச்சை பிரிவுக்கு (சி.சி.யூ.) கடந்த 3 ஆம் திகதி கொண்டு சென்றனர். சிறப்பு மருத்துவர்கள் அடங்கிய குழு ஒன்று அவருக்கு சிகிச்சை அளித்து வருகிறது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் மோடி மற்றும் உத்தர பிரதேச முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் ஆகியோர், அகிலேஷிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு முலாயம் சிங்கின் உடல்நலம் பற்றி கேட்டறிந்தனர். அனைத்து உதவிகளையும் செய்ய தயாராக இருக்கிறோம் என இருவரும் உறுதி அளித்தனர். முலாயம் சிங் உடல்நலம் பெற்று திரும்ப வேண்டும் என உத்தர பிரதேச துணை முதலமைச்சர் கேசவ் பிரசாத் மவுரியா, காங்கிரஸ் தலைவர்கள் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் தெரிவித்தனர். இந்நிலையில், முலாயம் சிங் யாதவ் சிகிச்சை பலனின்றி இன்று காலமானார்.

# சம்மாந்துறையில் அரசியல் தலைவர்கள் பலரின் பங்களிப்புடன் நேற்று 'மீலாத் வசந்தம்' நிகழ்வு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)





சம்மாந்துறையில் மனிதநேய நற்பணிப் பேரவை, சம்மாந்துறை – ஸ்ரீலங்கா இர்ாத் ஏ. காதர் நற்பணி மன்றம் ஆகியன ஏற்பாடு செய்த மீலாத் வசந்தம் சிறப்பு

நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.20 மணி முதல் சம்மாந்துறை அல் –மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் மைதான திறந்த வெளியரங்கில் இடம்பெற்றது.

மனிதநேயநற்பணிப்பேரவையின் ஆளுநர் சபை உறுப்பினரும் பிரதான ஆலோசகருமான, இராஜாங்க அமைச்சின் ஓய்வு நிலை செயலாளர் அஷ்ஷெய்க் எம்.ஐ. அமீர் (நளீமி) மற்றும் தேசிய, சர்வதேச சமுகநல செயற்பாட்டாளரும் ஜே.ஜே. பவுண்டேன் பணிப்பாளருமான கலாநிதி ஐ.வை.எம்.ஹனிப் ஆகியோர் முன்னிலையில், மனிதநேய நற்பணிப் பேரவை மற்றும் இர்ாத் ஏ.காதர் நற்பணி மன்றம் ஆகியவற்றின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளரும் ஸ்தாபகத் தலைவருமான மனிதநேயன் இர்ஷாத் ஏ.காதர் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில், சிறப்பு சொற்பொழிவு, சிறப்புக் கவியரங்கம். இஸ்லாமிய கீதம் உட்பட மேலும் பல நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வின் விசேட அம்சமாக, நாவலர் ஈழமேகம் பக்கீர் தம்பி நினைவரங்கில் சிறப்புக் கவியரங்கு வானொலி, தொலைக்காட்சி மற்றும் மேடைக் கவியரங்கின் பிரபல தலைவர் தமிழ்த்தென்றல் அலி அக்பர் தலைமையில் இடம்பெற்றதோடு, இதில் கவிதை பாடிய அரசியல் பிரமுகர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான சட்ட முதுமாணி ரவூப் ஹக்கீம், தமிழ் – முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ஹூனைஸ் பாறூக், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கொள்கை பரப்புச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே.எம்.ஏ.றஸ்ஸாக் (ஜவாத்), தேசிய காங்கிரஸின் கொள்கை மற்றும் சட்ட விவகார ஆலோசகர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா, இவர்களுடன் சிரேஷ்ட ஒலிபரப்பாளர் சட்டத்தரணி ஏ.எம்.தாஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் சிறப்புப் பேச்சாளராக பிரபல பேச்சாளர் சமூக ஜோதி எம்.ஏ.றபீக் கலந்து கொண்டார்.

இசைமுரசு நாகூர் ஈ.எம். ஹனீபாவின் எதிரொலி மருதமுனைக் கமாலின் இஸ்லாமிய கீதங்களும் இந்நிகழ்வில் இடம் பெற்றமையோடு, சமய மற்றும் சமூக சேவைகளில் தங்களின் அர்ப்பணிப்பினை வழங்கி வருகின்ற சிலருக்கு வாழ்நாள் சாதனையாள விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பின எம்.ஐ.எம் மன்சூர், சம்மாந்துறை பிரதேச செயலாள தேசபந்து எஸ்.எல்.எம்.ஹனிபா, சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். எம். எம். அமீர், பல்கலைக் கழகத்தின் முன்னாள் பதிவாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உபசெயலாளருமான கவிஞர் மன்சூ காதர் ஆகியோருடன் மேலும் பல அதிதிகளும், கல்விமான்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்த சிறப்பித்தனர்.



# இரவில் இருளில் மூழ்கும் மத்தியமுகாம் பிரதேசம்!

(நூருல் ஹுதா உமர்)

பல்லின சமூகங்கள் ஒன்றித்து வாழும் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச சபைக்குட்பட்ட மத்தியமுகாம் பிரதேசம் இரவு நேரங்களில் இருளில் மூழ்கியுள்ளதாகவும், அதனால் பல்வேறு சீர்கேடுகள், விபத்துக்கள், அனாச்சாரங்கள் இடம்பெறுகின்றன எனவும், இது தொடர்பில் பிரதேச சபைக்கு பலமுறை அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இழுத்தடிப்பு செய்து வருவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாவிதன்வெளி நகர் இருளில் இருக்கின்றது. இந்த நகரில் பௌத்த விகாரை, கோவில், ஜும்மாப்பள்ளிவாசல், வங்கிகள், பொலிஸ் நிலையம், தனியாருக்கு சொந்தமான வர்த்தக நிலையங்கள் மக்களின் குடியிருப்பு வீடுகள் என பல முக்கிய தளங்கள் இருக்கின்றன. இருளில் நகரே மூழ்கியுள்ளதனால் அச்சநிலை உள்ளது.

இந்த பிரதேசத்தின் நிலை தொடர்பில் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த. கலையரசன், நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை செயலாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலருக்கும் மக்கள் நேரடியாக தெரிவித்தும், உப தவிசாளர் உட்பட மக்கள் பிரதிநிதிகள் பலரும் சபையில் இது தொடர்பில் கேள்வியெழுப்பியும் வேண்டுமென்றே தவிசாளரும், சபை செயலாளரும் பாராமுகமாக இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இது விடயமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டவர் முன்வரவேண்டு என மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# அம்பாறையில் உள வளத்துக்கான 'மகிழ்ச்சி முகாம்' இறக்காமத்தில்







(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை ஆதார வைத்தியசாலையின் மனநல பிரிவும் உளச்சுகாதார முன்னேற்றத்திற்கான நிறுவனமும் இணைந்து நடத்திய 'மகிழ்ச்சி முகாம்' நிகழ்வு உளச்சுகாதார முன்னேற்றத்திற்கான நிறுவனத்தின் அம்பரை மாவட்ட தமிழ் பிரதேச இணைப்பாளர் ஐ.எல். இல்யாஸின் நெறிப்படுத்தலில் இறக்காமம் மதீனா வித்தியாலத்தில் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச செயலக உளவளத்துணை பிரிவின் ஊடாக உளச்சுகாதார முன்னேற்றத்திற்கான நிறுவனத்தினால் நடத்தப்படும் உளச் சுகாதார முன்னேற்ற பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் மாணவர்களின் களச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் நிகழ்வாக 'மகிழ்ச்சி முகாம்' ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

கிராமத்தில் உள்ள ஆண்கள், பெண்கள், பெற்றோர்கள், இளைஞர்கள், மாணவர்கள், சிறுவர்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்து உளவியல் ஆலோசனைகள், மகிழ்ச்சிகரமான வாழ்தல் கலை, முரண்பாடுகளை இனம்காணல், குழுப் பயிற்சிகள், செயல்முறை களச் செயற்பாடுகள், குழு விளையாட்டுக்கள் போன்ற பல்வேறு சுவாரஸ்மான நிகழ்வுகள் இடம்பெற்றன. இவற்றில் அம்பாறை ஆதார வைத்தியசாலை உளநலப் பிரிவு வைத்திய நிபுணர் டாக்டர் சமீர, சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவனத்தின் அம்பாறை காரியாலய இணைப்பாளர் திரு. பிரகீத் இறக்காமம் மதீனா வித்தியாலய அதிபர் எம்.ஐ ஜௌபர், கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் ஏ. நளீம் (மௌலவி), உளவளத்துணை உத்தியோகத்தர்களான ஏ.எல்.பைசால் (மதனி), ஏ.எச். றகீப், எஸ். ஆப்தீன் (அக்க ரைப்பற்று), சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்த எம்.எச். வஹாப், பயிற்சி நெறியில் கலந்து கொண்ட வளவாளர் கள், நிறுவனத்தின் உறுப்பினர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

# ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கை தொடர்பாக பொருளாதார நீதிக்கான பெண்கள் கூட்டமைப்பு கண்டனம்!



அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரானகத் தொடரும் வன்முறைகளைப் பொருளாதார நீதிக்கான பெண்கள் கூட்டமைப்பு கடுமையாகக் கண்டித்துள்ளது.

அரகலயவில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்காக காலிமுகத்திடலில் 9 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வின் போது தாயையும் குழந்தையையும் பொலிஸார் பலவந்தமாக இழுத்துச்செல்வதையும், தன்னை நோக்கி வந்த கலகமடக்கும் பிரிவினரிடமிருந்து தந்தை தனது பிள்ளையுடன் பின்வாங்குவதையும் நாங்கள் அச்சத்துடன் பார்த்தோம் என பொருளாதார நீதிக்கான பெண்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டங்களில் பெண்கள் குழந்தைகளுடன் பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள பெண்கள் கூட்டமைப்பு, ஆண்களைப் போல இல்லாமல் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளும்போது பிள்ளைகளையும் அழைத்து வருகின்றனர். வீட்டில் பிள்ளைகளை விட்டுவிட்டு வருவதற்கான ஆதரவு இல்லாததே இதற்குக் காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

மைதியான ஆர்ப்பாட்டத்துக்கான ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவே இதனை அவர்கள் செய்கின்றனர் எனவும் மகளிர் அமைப்பு தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகளவ பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும் குழந்தைகளுமே என்பதை நாங்கள் வலியுறுத்த விரும்புகின்றோம் எனவும் மகளிர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இன்றைய செயற்பாடுகள் மறைமுகமாக இன்றி வெளிப்படையான ஜனநாயக தன்மையற்ற ஏதேச்சதிகார அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கடுமையான விதத்தில் நினைவுபடுத்துகின்றன எனத் தெரிவித்துள்ள பொருளாதார நீதிக்கான பெண்கள் கூட்டமைப்பு, நாட்டில் ஜனநாயக ரீதியில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு உள்ள உரிமையை தொடர்ச்சியாக இடைவிடாத விதத்தில் த:க்கப்படுவதைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இவ்வாறான அனைத்து சட்டவிரோத ஈவிரக்கமற்ற நடவடிக்கைகளை முடிவிற்கு கொண்டு வருமாறும் அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காகக் கைதுசெய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்யுமாறும் கேட்டுக்கொள்வதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. மாற்றுக்கருத்தை வெளிப்படுத்தும் குரல்களை நசுக்குவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போதிலும் நாங்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக பட்டினியில் பாதுகாப்பு இன்மையில் துன்பத்தில் சிக்குண்டுள்ள போதிலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை இந்த நாட்டின் மக்கள் தொடர்ந்தும் எதிர்க்கின்றனர் என்பதில் நம்பிக்கையடைகின்றோம் எனவும் மகளிர் அமைப்பு தெரிவித்துள்ளது.

## சட்டவிரோத உத்தரவுகளை நிறைவேற்றும் பொலிஸார் அதற்கான விலைகளைச் செலுத்தவேண்டி இருக்கும்!

### சாலிய பீரிஸ் எச்சரிக்கை



சட்டவிரோத உத்தரவுகளை நிறைவேற்றும் பொலிஸார் என்றோ ஒரு நாள் சட்டவிரோத உத்தரவுகளை நிறைவேற்றியமைக்கான விளைவுகளை அனுபவிக்கவேண்டியிருக்கும் என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலிஸார் தங்கள் எஜமானர்களைத் திருப்திப்படுத்துவதற்காக மக்களின் உரிமைகளை மீறியவர்கள் தங்கள் தவறுகளுக்கான விலைகளை செலுத்தியதை நான் பார்த்திருக்கின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிலர் இழப்பீடுகளைச் செலுத்தினர், தங்கள் பதவி உயர்வுகளை இழந்தனர், ஏனையவர்கள் குற்றங்களில் ஈடுபட்டமை உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து சிறைத்தண்டனையை அனுபவித்தனர் எனத் தெரிவித்துள்ள சாலியபீரிஸ், அந்த வேளைகளில் அவர்களைக் காப்பாற்ற அவர்களின் எஜமானர்கள் காணப்படமாட்டார்கள் பொலிஸார் தண்டனைகளை தனியாக அனுபவிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## நெருக்கடிக்குத் தீர்வுகாண என்னிடம் வழி இல்லையாம்!

### உண்மையைத் தெரிவித்தார் பந்துல



நாட்டை தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்கான வழிமுறைகளை அறிந்தவர்கள் முன்வருமாறு போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கம் தனது கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை என அறிவித்துள்ள நிலையில், அதன் நிலைமையிலிருந்து மீள்வது எப்படி என்பதை எவரேனும் அரசாங்கத்திற்கு கற்பிக்க முடியுமானால் அது அவர்களுக்கு இவ்வுலகில் புகழையும் மறுமையில் ஆசீர்வாதத்தையும் கொண்டுவரும் என்று அமைச்சர் கூறினார்.

இலங்கை அரசு இறையாண்மை பத்திரங்களை வழங்கி வாங்கிய கடனில் ஒரு பகுதியை செலுத்தவில்லை என்று கூறி அமெரிக்க அரசு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் அவ்வாறான ஒரு வழக்கை எதிர்கொள்ளும் நிபுணத்துவம் இலங்கைக்கு இல்லை என்றும் அவர்

எனவே, கிளிஃபோர்ட் மற்றும் சன்ஸ் என்ற நிறுவனத்திடம் சட்ட ஆலோசனை வழங்கும் பொறுப்பை அரசு ஒப்படைத்து, நெருக்கடியில் இருந்து நம்மை விடுவிப்பதற்கான அமைப்பைத் தயாரிக்க லசார்ட் என்ற நிறுவனத்தைத் தேர்ந்





## சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் ஆசிரியர் தின நிகழ்வு நடந்தது!

கந்தரோடை கலைமதி சனசமூகநிலையத்தினரால் நடத்தப்படுகின்ற முன்பள்ளியின் ஆசிரியர் தின நிகழ்வு (நேற்று) ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் தலைவரும் கந்தரோடை கலைமதி சனசமூக நிலையத் தலைவருமாகிய கணேசமூர்த்தி டினேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கான அனுசரணையை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர் லயன் ராசன் வழங்கியிருந்தார்.

மாணவர்களால் ஆசிரியர்கள் வரவேற்கப்பட்டு, மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சட்டமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைப்பு!

### விஜேதாஸ ராஜபக்ஷ தகவல்

ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு சட்டமூலம் தற்போது சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் ஊடாக, தேவையான சந்தர்ப்பங்களில் விசாரணைகளுக்காகக் கைதுசெய்ய சந்தர்ப்பம் ஏற்படும் எனவும்

## ஒன்று சேர்ந்து.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனித்தனியாகச் செய்த திருட்டுகளும், தனித்தனியாகச் செய்த மோசடிகளும், தனித்தனியாக நாட்டை

வங்குரோத்தாக்கியதையும் இப்போது ஒன்று சேர்ந்து வங்குரோத் தாக்க ஒருவரையொருவர் தயார்படுத்தி ஒன்றிணைய முயற்சித்துவருகின்றனர் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சாடினார்.

இந்த நாட்டை அழித்து மக்களின் வாழ்க்கையை அசௌகரியத்துக்கு மேல் அசௌகரித்துக்குட்படுத்திய கும்பலை இந்த நாட்டில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க ஐக்கிய மக்கள் சக்தி இடமளிக்காது என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அந்தத் திருடர்களை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவர இந்த நாட்டு மக்களும் தயாராக இல்லை என்றும் குறிப்பிட்டார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மஹியங்கனைத் தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மீண்டும் டீல்கார மோசடி கும்பல் ஒன்று சேர்ந்து எழுந்து நிற்கத் தயாராகி வருகின்றது.

இதற்காக ஒன்றிணையுமாறு ஒருவர் (ரோஹித அபேகுணவர்த்தன) அழுது கொண்டே பிச்சை எடுப்பது போல கோரிக்கை விடுக்கின்றார்.

ஆனால், அவ்வாறு அழுகின்ற அவருக்கு இந்த நாட்டில் இருநூற்றி இருபது இலட்சம் மக்கள் இன்னும் அழுது கொண்டே வாழ்கிறார்கள் என்பது புரியவில்லை.

தங்கள் குழந்தைகளுக்குச் சிறிதளவு பால் மாவைக் கொடுக்க முடியாமல் தாய்மார்கள் அழுகின்றார்கள். உரங்கள் இல்லாததால் விவசாயிகள் அழுகின்றார்கள்.

எதிர்காலமின்றி இளைஞர் தலைமுறையினர் குரல் எழுப்புகின்றனர். பொதுவாக 220 இலட்சம் பேரும் அழுது கொண்டே வாழ்கின்றார்கள். அது அவர்களுக்குப் புரியாமல் இருப்பது ஆச்சரியமாகவுள்ளது - என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மஹியங்கனைத் தேர்தல் தொகுதி அமைப்பாளர் லக்ஸ்மன் செனவிரத்ன ஏற்பாடு செய்திருந்த இந்தக் கூட்டத்தில் கட்சியின் பெருந்திரளான ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

## தேர்தலை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல். ரிஸ் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உரிய திகதி ஒன்றைத் தீர்மானிக்காது சட்டவிரோத காரணங்களை முன்வைத்து உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அரசியல் இலாபத்துக்காக மாத்திரமே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் அறிவார்கள்.

அரசின் இந்தத் தீர்மானத்துக்கு எதிராக அனைத்து எதிர்கட்சிகளும் ஒன்றிணைந்து வலுவான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அரசின் மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு ஜனநாயக ரீதியில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் நாங்கள் முன்னெடுப்போம் - என்றார்.

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் புத்தகக் கண்காட்சி!

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் கிராமத்தில் அமைந்துள்ள பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்று (திங்கட்கிழமை) புத்தகக் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது.

பொதுநூலகர் திருமதி தவராஜா ஜேசித்ராவின் ஏற்பாட்டில், வாசகர்களின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியில் குருக்கள்மடம் வாசகர் வட்ட தலைவர் சி.விவேகானந்தம், மட்.பட்.குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், கிராம முக்கியஸ்தர்கள் ஆலய பரிபாலன சபை உறுப்பினர், கழகங்கள், சங்கம் என கிராம மக்கள் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர். இதன்போது நூலகத்தில் உள்ள நூல்கள் தொடர்பில் விளக்கங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதோடு அவர்கள் வாசிப்பிலும் ஈடுபட்படனர்.

மேலும் வீட்டுத்தோட்டம் சம்பந்தப்பட்ட விளக்கங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, மாணவர்களுக்கு நூலகத்தில் அமைந்துள்ள, வீட்டுத்தோட்ட பயிர்களை பார்வையிடவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2022இல் வெளியிடப்பெற்றது.